# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 253 /மா/2022**

**நாள்: 01.02.2023**

திரு. I. முகம்மது ரஹிமுத்தீன்,
கிழக்கு தாம்பரம், சென்னை – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம் – எதிர்மனுதாரர்

சென்னை–600 073, கிழக்கு தாம்பரம், இராஜகீழ்ப்பாக்கம், ஆலவட்டம்மன் கோயில் தெரு, பிளாட் எண்.06 என்ற முகவரியில் வசிக்கும் திரு. முகம்மது ரஹிமுத்தீன் என்பவரின் 12.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.12.2022–ல் பெறப்பட்டு 253/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–600 073, கிழக்கு தாம்பரம், இராஜகீழ்ப்பாக்கம், ஆலவட்டம்மன் கோயில் தெரு, பிளாட் எண்.06 என்ற முகவரியில் வசிக்கும் திரு. முகம்மது ரஹிமுத்தீன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 12.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

" திரு குப்புசாமியின் மகன் திரு கே.ராமு என்பவர் எண்.1, ஆலவட்டம்மன் கோயில் தெருவில் வசித்து வருகிறார். இவர் எங்களுடைய நிலத்தின் எல்லை கற்களை தூக்கி விசிறிஅடித்து விட்டு எங்களுடைய பிளாட் எண்.23க்கு முன்னால் முகப்பை மூடி மறைத்து Survey எண்.7ல் ஆலவட்டம்மன் கோயில் தெருவில் வண்டிப்பாதையில் தாம்பரம் மாநகராட்சிக்கு சொந்தமான வண்டிப்பாதையில் அனுமதியில்லாமல் கட்டடம் கட்டிக்கொண்டும் எங்களுடைய நிலத்திற்கு போகும் வழியை மூடி மறைத்து எங்கள் நிலத்திற்கு போகவிடாமல் தடுத்துக்கொண்டு இருக்கிறார். கழிவு நீர் தொட்டியையும் வண்டிப்பாதையில் survey எண்.7–ல் கட்டிக்கொண்டும், Toilet-ஐ வண்டிப்பாதையில் கட்டிக்கொண்டும், மரங்களை வண்டிப்பாதையில் வளர்த்துக்கொண்டும் இருக்கிறார். 21.09.2022 அன்று இரவு 12.00மணி அளவில் நடுரோட்டில் பள்ளம் வெட்டி தாம்பரம் மாநகராட்சியின் அனுமதி இல்லாமல் வண்டிப்பாதையில் survey எண்.7ல் ஆலவட்டம்மன் கோயில் தெருவில் ward -41ல் கழிவு நீர் போவதற்கு குழாயை பதியவைத்துக்கொண்டு இருக்கிறார். இவர் அரசு நிலத்தில் அனுமதி இல்லாமல் வீடு கட்டி உள்ளார். சிறிய குடிசையும் கட்டியுள்ளார். பலமுறை தாம்பரம் கார்ப்பரேசன் கமிஷனருக்கு புகார் மனு கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த வண்டிப்பாதை ஆக்கிரமிப்பையும் அகற்றவில்லை. (M. இளங்கோவன் கார்ப்பரேசன் கமிஷனர் அவர்கள்). பிறகு நகரமைப்பு அதிகாரி Town Planning Officer இடம் புகார் மனு கொடுத்தேன்.

அதற்கும் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆக்கிரமிப்பையும் அகற்றவில்லை. (அன்பு Town Planning Officer). பிறகு நகரமைப்பு பிரிவு ஆய்வாளரிடம் (செம்பாக்கம்) புகார் மனு கொடுத்தேன். அவரும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த ஆக்கிரமிப்பையும் அகற்றாமல் அப்படியே விட்டுவிட்டார். இவர்கள் மூவரும் ஆக்கிரமிப்பாளருக்கு பக்கபலமாக இருந்து வருகிறார்கள். இந்த வண்டிப்பாதை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டிய K. ராமு என்பவர் இரண்டு வரிவிதிப்பு எண்களில் வரியை செலுத்திக்கொண்டு வருகிறார். (1) 00/005/00755 (2015 முதல் 2022 வரை), (2) 00/005/001130 (2010 முதல் 2022 வரை) வரி போடப்பட்டுள்ளது. இந்த ஆக்கிரமிப்பாளர் வைத்து இருக்கும் ஆவணங்கள் எல்லாம் முன்னுக்கு பின் முரணாக போலி ஆவணமாக வைத்துள்ளார். இவரை தீர விசாரணைசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். K.ராமு என்பவர் அவராக முன்வந்து ஆக்கிரமிப்பை அகற்றி கொண்டோம் என்று முன்னால் வேலை செய்த நகரமைப்பு பிரிவு ஆய்வாளர் எனக்கு கடிதம் மூலமாக தெரிவித்து இருந்தார். போய் பார்த்த பொழுது அந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடம் அப்படியே இருக்கிறது. இவர் பொய்யான தகவல் சொல்லி அவர் பல்லாவரம் நகராட்சிக்கு மாற்றம் செய்து கொண்டு போய்விட்டார். (அவருடைய பெயர் திரு.சங்கர், நகரமைப்பு பிரிவு ஆய்வாளர்) (கடித எண்.ந.க.எண்.1175/2021/எப்1 நாள் 2.9.2021 (செம்பாக்கம் நகராட்சியாக இருந்தபொழுது அனுப்பிய கடிதம்), K. இராமு என்பவர் No.5, குளக்கரை தெருவில் வசிப்பதாக தாம்பரம் செம்பாக்கம் VAO அவர்களிடம் தாசில்தார் முத்திரையில்லாமலும் அவருடைய கையெழுத்து இல்லாமலும் 2005ம் வருடம் இருப்பிட சான்று வாங்கியிருக்கிறார். 2005ம் ஆண்டு தாம்பரம் செம்பாக்கம் பேரூராட்சியாக இருந்தபொழுது K. ராமு என்பவர் ரூபாய் 50/– செலுத்தி வரி ரசீது போட்டு இருக்கிறார். அந்த வரி ரசீது எண்.1266 இதுவும், No.5 குளக்கரை தெருவில் வசிப்பதாக வீட்டுவரி ரசீது பெற்றிருக்கிறார். ஒரு இடத்தில் வசிப்பதாக இருப்பிட சான்றிதழை பெற்றுக்கொண்டு வேறு ஒரு இடத்தில் வசித்து வருகிறார். K.ராமு என்பவர் வைத்துள்ள அனைத்து ஆவணங்கள் போலியானது. மின்சார இணைப்பும் பிளாட் எண்.23யை காண்பித்து மின்சாரம் பெற்றிருக்கிறார். எல்லா ஆவணங்களையும் இந்த புகார் மனுவுடன் வைத்துள்ளேன். Survey எண்.7ல் உள்ள இந்த வண்டிப்பாதை ஆக்கிரமிப்பை அகற்றி survey எண்.10/1, 23ம் எண் உள்ள எங்களுடைய நிலத்திற்கு போகும் வழியை சீர் செய்து தருமாறும் தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அய்யா அவர்களுக்கு I. ரஹிமுத்தீன் ஆகிய நான் வேண்டுகோள் விடுக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 14.12.2022 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது.

3) தாம்பரம் மாநகராட்சி ஆணையர், தனது 27.12.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–3, இராஜகீழ்ப்பாக்கம் கிராமம், திரு. முகமது ரஹிமுத்தீன் என்பவரின் புல எண்.10 இடத்திற்கு தென்புறம் அமைந்துள்ள சர்வே புல எண்.7 சர்க்கார் புறம்போக்கு புஞ்சை தரிசு என வகைப்பாடு செய்யப்பட்ட இடமாகும். ஆனால் மனுதாரரின் மனுவில் மேற்படி சர்வே புல எண்.7 வண்டிப்பாதை என தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்விடத்தின் மொத்த பரப்பு 0.61.0 ஹெக்டேரில் 0.03.75 ஹெக்டேர் பரப்பு புஞ்சை தரிசு புறம்போக்கு நிலத்தினை கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து நான்கு நபர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆணைப்படி வீட்டுமனை ஒப்படைப்பு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அதில் மனுதாரர் ஆக்கிரமிப்பு என தெரிவித்துள்ள புலஎண்.7ல் திரு ராமு என்பவருக்கு புல எண்.7/2 என உட்பிரிவு செய்யப்பட்டு, தாம்பரம் வட்டாட்சியரால் வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு பட்டா வழங்கப்பட்ட இடத்திற்கு கூடுதலாக உள்ள பகுதியினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை தாம்பரம் மாநகராட்சி (முந்தைய செம்பாக்கம் நகராட்சி) அப்புறப்படுத்த கோரியதின் பேரில் இடத்தின் உரிமையாளர் திரு.K. ராமு என்பவரால் அகற்றப்பட்டுவிட்டது. எனவே மேற்படி இடம் திரு.ராமு என்பவருக்கு அரசால் வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை பட்டா இடம் எனவும், மேலும் அதில் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 23.01.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 29.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 23.01.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" எனக்கு சொந்தமான கிழக்கு தாம்பரம், இராஜகீழ்ப்பாக்கம் ஆலவட்டம்மன் கோயில் தெரு பிளாட் எண்.23–க்கு அருகே வசித்து வரும் குப்புசாமி என்பவரின் மகன் திரு.ராமு என்பவர் எனது வீட்டின் வழியை மறித்து தனது கட்டடத்தை கட்டியுள்ளார். இதனால் எங்களுக்கு சொந்தமான நிலத்திற்கு செல்வதற்கான வழிவகை இல்லை. மேலும் தாம்பரம் மாநகராட்சியின் அனுமதியின்றி வண்டிப்பாதையில் தன்னிச்சையாக கழிவு நீர் குழாய் கட்டியுள்ளார். இது தொடர்பாக மாநகராட்சி அலுவலர்களுக்கு புகார் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் இது தொடர்பாக மாவட்ட ஆட்சியருக்கு புகார் அனுப்பப்பட்டும் மேல் நடவடிக்கை ஏதும் இல்லை. மேற்கண்ட ராமு என்பவர் போலியான ஆவணங்களைக் கொண்டு எனது நிலத்திற்கு செல்லும் வழியை மறித்து தனது கட்டடத்தை கட்டியுள்ளதால், மேற்கண்ட எனது நிலத்திற்கு செல்லக்கூடிய வண்டிப்பாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றிட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் 12.12.2022 நாளிட்ட எனது புகார் மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) தாம்பரம் மாநகராட்சி நகரமைப்பு திட்ட அலுவலர் 23.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :

" தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 இராஜகீழ்ப்பாக்கம் திரு ஐ. முகம்மது ரஹிமுத்தீன் என்பவரின் புல எண் 10–க்கு தென்புறம் சர்வே எண் 7 சர்க்கார் புறம்போக்கு புஞ்சை தரிசு என வகைப்பாடு செய்யப்பட்ட இடமாகும். மொத்தம் 0.61.0 ஹெக்டேரில் 0.03.75 ஹெக்டேர் பரப்பு புஞ்சை புறம்போக்கு நிலத்தை கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை நாள் 28.09.2012ல் வீட்டு மனை ஒப்படைப்பு செய்யப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் ஆக்கிரமிப்பு என தெரிவித்துள்ள புல எண் 7ல் திரு.K. ராமு என்பவருக்கு புல எண் 7/2 என உட்பிரிவு செய்யப்பட்டு, தாம்பரம் வட்டாட்சியரால் வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது எனவும் அவ்வாறு வழங்கப்பட்ட இடத்திற்கு கூடுதலாக உள்ள பகுதியில் மேற்கண்ட ராமு என்பரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடத்தை அவராலேயே அகற்றப்பட்டு விட்டது. தற்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் தாம்பரம் மாநகராட்சி நகரமைப்பு திட்ட அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது புகாரில் திரு.K.ராமு என்பவர் போலியான ஆவணங்களை கொண்டு தனது இடத்திற்கு செல்லக்கூடிய வழியை மறித்து ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ள கட்டிடத்தை அகற்றிட ஆவன செய்யும்படி இம்முறைமன்றத்தை கோரியுள்ளார்.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–03 இராஜகீழ்ப்பாக்கம் திரு.ஐ.முகம்மது ரஹிமுத்தீன் என்பவரின் புல எண் 10–க்கு தென்புறம் சர்வே எண் 7 சர்க்கார் புறம்போக்கு புஞ்சை தரிசு என வகைப்பாடு செய்யப்பட்ட இடம். மொத்தம் 0.61.0 ஹெக்டேரில் 0.03.75 ஹெக்டேர் பரப்பு புஞ்சை புறம்போக்கு நிலத்தை கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்து காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை நாள் 28.09.2012–ல் வீட்டு மனை ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது எனவும் மனுதாரர் ஆக்கிரமிப்பு என தெரிவித்துள்ள புல எண்7–ல் திரு. ராமு என்பவருக்கு புல எண் 7/2 என உட்பிரிவு செய்யப்பட்டு, தாம்பரம் வட்டாட்சியரால் வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது எனவும் வழங்கப்பட்ட இடத்திற்கு கூடுதலாக உள்ள பகுதியில் மேற்கண்ட ராமு என்பவரால் ஆக்கிரமிப்பு

செய்யப்பட்ட இடம் அவராலேயே அகற்றப்பட்டு விட்டது. தற்போது அந்த இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்று தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு திட்ட அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள இடம் திரு.K.ராமு என்பவருக்கு அரசு வழங்கியுள்ள இடம் என்றும் அங்கு தற்போது ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்ற தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில் மனுதாரர் தனது புகார் குறித்து மாவட்ட நில அளவைத்துறை மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார். மேலும் நில அளவையின்போது ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது ஊர்ஜிதமானால் அந்த ஆக்கிரமிப்பை அகற்றிட தக்க நடவடிக்கை எடுக்க தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

**1)**திரு. I. முகம்மது ரஹிமுத்தீன்,
பிளாட் எண்.**6**, ஆலவட்டம்மன் கோயில் தெரு,
இராஜகீழ்ப்பாக்கம், கிழக்கு தாம்பரம்,
தாம்பரம், சென்னை – **600 073.**

**2)**ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்.

**3)**நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.**75**, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – **600 028.**

**4)**இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் **(Nodal Officer)**
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.**75**, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – **600 028.**

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்